| | | |
|---|---|---|
| சாட்சி : DW5<br>திருமதி.அன்புமணி<br>க.பெ. திரு. கணேசன் | அ.வ.எண்.289/2011 | 09.04.2026 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) எனது சகோதரியின் பெயர் மகாலெட்சுமி என்றால் சரிதான். எனக்கும் எனது சகோதரிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் 4 வருடங்களாக, அதன் பின் அவரது மகள் இறந்தபிறகு தற்போது பேசிக்கொள்வோம். மகாலெட்சுமியின் மகள் இறந்து 4 மாதங்கள் இருக்குமா என்றால் 3 மாதங்கள் இருக்கும்.

2) சிவகாமியம்மாள் தனது சொத்தை யாருக்கு கொடுத்தார் என்றால் ஆனந்தாயி அம்மாளுக்கு கொடுத்தார். என்ன ஆவணமாக கொடுத்தார் என்றால் தான செட்டில்மெண்ட் ஆவணமாக. எந்த ஆண்டு செட்டில்மெண்ட் கொடுத்தார் என்றால் 1953 ல், மாதம், தேதி தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ஆனந்தாயி அம்மாளுக்கு ஒரே சகோதரி இருந்ததாக என்னிடம் யார் சொன்னது என்றால் எனது தந்தை.

3) எனது தந்தை சாம்பசிவத்தின் பெற்றோர்கள் பெயர் தெரியுமா என்றால் சிங்காரம் பண்டாரம் – குழந்தையம்மாள். மேற்படி சிங்காரம் பண்டாரத்தின் சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டுக்காரன்பட்டி என்றால் சரிதான். சாம்பசிவம் எங்கு படித்தார் என்றால் 5 வயதில் இருந்து இலால்குடியில் தான் உள்ளார், இங்கு தான் படித்தார். எனது தாயார் பெயர் என்ன என்றால் மீனம்பாள். சாம்பசிவம்–மீனம்பாளுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது.

4) எனது தாயார் இறந்த ஆண்டு என்ன என்றால் நான் 1ம் வகுப்பு படிக்கும்பொழுது குழந்தையம்மாள் இறந்தார், அவர் இறந்து 2 வருடத்திற்கு பிறகு எனது தாயார் இறந்தார். 1ம் பிரதிவாதி சரஸ்வதியை எனது தந்தை சாம்பசிவம் எந்த ஆண்டு திருமணம் செய்தார் என்றால் 1981. மேற்படி சரஸ்வதிக்கு பிறந்த குழந்தைகள் தான் இவ்வழக்கின் 2,3 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

5) எனது தகப்பனார் இறப்பு சான்றிதழில் எனது இறந்து போன தாயார் பெயரோ, எனது பெயரோ, எனது தங்கை பெயரையோ சேர்க்காமல் 2 வது மனைவியான சரஸ்வதி மற்றும் அவரது பிள்ளைகளான 2,3 பிரதிவாதிகள் பெயர்களை மட்டும் சேர்த்து வாரிசு சான்றிதழ் பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எங்களது பெயரை விட்டுவிட்டு ஏன் வாரிசு சான்றிதழ் பெற்றார்கள் என்று 2ம் பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன், அதற்கு அவர் கடைசி வரை எங்களை பார்த்துக்கொண்டு, சீர்வரிசை செய்வதாக கூறினார்.

6) சாம்பசிவத்தின் ஒரே தம்பி நாகராஜ் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பில் சாம்பசிவத்திற்கு தம்பி கிடையாது என்றும், சாம்பசிவம் மட்டுமே ஒரே வாரிசு என்றும் கூறியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்களும் எனது சித்தி பிள்ளைகளும் சுமூகமான உறவில் உள்ளோமா என்றால் சுமூகமாக தான் உள்ளோம். ஆனந்தாயி அம்மாள் அவரது சொத்தை யாருக்கு கொடுத்தார் என்றால் சாம்பசிவத்திற்கு.

7) என்ன ஆவணமாக கொடுத்தார் என்றால் செட்டில்மெண்ட்டாக. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால்

பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தை பார்த்துள்ளதாக கூறியுள்ளேன், ஆனால் ஆனந்தாயி அம்மாள் எழுதியது செட்டில்மெண்ட் ஆவணம் அல்ல, உயில் என்றால் சரிதான், உயில் ஆவணம் தான். மேற்படி உயில் ஆவணத்தின் தேதி, மாதம், வருடம் என்ன என்றால் 1979 தேதி, மாதம் தெரியாது.

8) மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தது யார் என்றால் பெயர் தெரியாது, ஒருவர் கொத்தனார், மற்றொருவர் பெயர் தெரியாது. மேற்படி உயில் பதிவு செய்யாத உயில் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பதிவு செய்யப்படாத உயிலின் அடிப்படையில் தான் சாம்பசிவம் பெயருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான்.

9) மேற்படி சாம்பசிவம் அதனை யாருக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் தனது 2 வது மனைவி சரஸ்வதிக்கு எழுதி வைத்தார், அப்போது சிவக்குமார் மைனராக இருந்ததால் வீடு கட்டும் பொழுது சரஸ்வதி அதனை சிவக்குமாருக்கே எழுதிக்கொடுத்துவிட்டார். ஆதியில் தாவா சொத்து கூரைவீடாக இருந்தது என்றால் சரிதான். 2011 ல் தான் மேற்படி கூரையை அகற்றிவிட்டு 2 ம் பிரதிவாதி சிவக்குமார் அதில் வீடுகட்ட ஆரம்பித்தார் என்றால் சரிதான்.

10) சாவித்திரியம்மாள் என்பவர் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். 2011 ல் 2 ம் பிரதிவாதி சிவக்குமார் அதில் வீடுகட்ட ஆரம்பித்த போது மேற்படி சாவித்திரியம்மாள் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு எந்த பகுதியில் சாவித்திரியம்மாள் இருந்தார் என்றால் வடபுறம். வழக்கு எண் என்ன என்றால் தெரியாது. வழக்கு என்ன முடிவானது என்றால்

சிவக்குமாருக்கு ஆதரவாக முடிவானது.

11) 2011ல் 2ம் பிரதிவாதி சிவக்குமார் அதில் வீடுகட்ட ஆரம்பித்த போது அனுமதி பெற்றாரா என்றால் வாங்கினார். எனது தகப்பனாரின் மோட்ச தீப பத்திரிக்கை பி.சா.ஆ.34 ஐ யார் தயார் செய்தது என்றால் 2ம் பிரதிவாதி சிவக்குமார். தாவா சொத்தின் கதவு எண் என்ன என்றால் கதவு எண்.58/A. தாவா சொத்தின் நான்கெல்லை என்ன என்றால் வடக்கில் சாவித்திரியின் வீடு, தெற்கே கோவில் மனை, கிழக்கில் சந்து, மேற்கிலும் சந்து.

12) சாவித்திரியம்மாளுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையே தாவா சொத்தை பொறுத்து உரிமை பிரச்சனையா அல்லது எல்லை பிரச்சனையா என்றால் எல்லை பிரச்சனை. சாவித்திரியம்மாள் வழக்கு தாக்கல் செய்த விபரமும், அது தீர்ப்பாகிய விபரமும் எனக்கு யார் சொல்லியது என்றால் 1, 2 பிரதிவாதிகள். எனது சகோதரி மகாலெட்சுமிக்கும், சரஸ்வதிக்கும் அவரது பிள்ளைகளுக்கு பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது.

13) ஆனந்தாயிஅம்மாள் உயில் ஆவணத்தில் மேற்படி ஆனந்தாயிஅம்மாள் கையொப்பம் செய்துள்ளாரா அல்லது கைரேகை வைத்துள்ளாரா என்றால் வெகு நாட்கள் ஆனதால் நியாபகம் இல்லை, ஆனால் பொதுவாக ஆனந்தாயிஅம்மாள் கைரேகை வைப்பார். சாம்பசிவத்திற்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் நந்தவனம் உள்ளது. மேற்படி நந்தவனம் என்பது எங்களது குடும்பத்தார் யாரேனும் இறந்து போல் அவர்களை அடக்கம் செய்யும் இடம் என்றால் சரிதான், அத்துடன் தோப்புடன் கூடிய 20 செண்ட் இடமும் உள்ளது.

14) ஆனந்தாயிஅம்மாள் உயில் ஆவணம் எதுவும் எழுதிவைக்கவில்லை என்றாலும், அவர் இறந்த பிறகு மோசடியாக சாம்பசிவம் மேற்படி உயிலை உற்பத்தி செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. சாம்பசிவத்திற்கு சகோதரரே இல்லை என்று கட்சி செய்துவிட்டு, பின்னிட்டு இவ்வழக்கில் சாம்பசிவத்தின் சகோதரர் நாகராஜ் ஆஜர் ஆன பிறகு 2ம் பிரதிவாதி என்னை தூண்டிவிட்டு நான் மனு செய்து இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

15) எனது சகோதரி மகாலெட்சுமி இவ்வழக்கில் ஆஜரானால் உண்மை விபரங்கள் தெரியவரும் என்பதால் தான், அவரது முகவரி தெரியவில்லை என்று 2ம் பிரதிவாதி தெரிவித்தார் என்றால் சரியல்ல. ஆனந்தாயிஅம்மாள் ஏற்படுத்தியதாக கூறும் அசல் உயில் ஆவணத்தை தாக்கல் செய்தால் உண்மை விபரங்கள் தெரியவரும் என்பதால் தான், நகலை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

16) எனது சித்தப்பா நாகராஜ் வழக்கில் ஆஜராக சிவகாமி அம்மாளுக்கு அகிலாண்டம் அம்மாள், ஆனந்தாயி அம்மாள், குழந்தையம்மாள் ஆகிய 3 பெண்கள் உண்ட சாட்சியம் அளித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் நாகராஜ் எங்களிடம் பேசுவதில்லை. மேற்படி நாகராஜ் அளித்த சாட்சியத்தை பொய்யாக்குவதற்காக 2ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில், இவ்வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17) முத்துசாமி என்பவர் யார் என்றால் யார் என்று தெரியாது. நான் இவ்வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதனால் என்னுடைய சாட்சியம்

**ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.**